1984 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வப்போது எடுக்கின்ற நடவடிக்கைகளையும், இருக்கின்ற நிலைமைகளையும், கிடைக்கின்ற தகவல்களையும் அவைக்கு எந்த முறையிலே தெரிவிக்க வேண்டுமோ, அதைத் தெரிவிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. என்றாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரிடையாக பார்வையிடுவதன் மூலமாக எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்க ஆங்காங்கு சென்று அங்குள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதன் மூலமாக, அங்கே ஓரளவிற்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்ற விவரங்கள் அரசுக்கு கிடைக்க அரசு அதை அவைக்கு தர முயற்சி எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : உதவிக்கு படகுகள் போய்ச் சேரவில்லை என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று கண்டதற்குப் பிறகு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, வெள்ள விபத்தைப் பற்றி நாவலர் அவர்கள் தெரிவித்துவிட்டதால் நான் அதைப்பற்றிப் பேசாமல் சென்னையில் அரசினர் கலைக் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து தொழுதூர் அருகே விபத்துக்குள்ளானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன் ஆகியோர் '' அண்மையில் சென்னைக்கு வந்துகொண்டிருந்த திருவள்ளுவர் விரைவுப் பேருந்தும் ஒரு லாரியும் தொழுதூர் அருகே மோதி டிரைவர் உட்பட மூவர் இறந்துள்ளதாலும், அறுவர் அபாய நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளதாலும், பலர் படுகாயமடைந்திருப்பதாலும், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அண்மைக் காலத்திலே லாரி பஸ் மோதல்கள் அதிகப்படியாக தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. அதன் காரணமாக பலவேறுவிதமான உயிரிழப்புச் சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அண்மையில் நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப பேருந்தும் ஒரு லாரியும் தொழுதூர் அருகிலே மோதிக்கொண்டன. பொதுவாகவே லாரி மோதலால் விபத்துக்களின் எண்ணிக்கை உச்சகட்டத்தை அடைந்திருக்கின்றது. ஏற்படுகிற விபத்துக்களிலே 99 சதவீதத்திற்கு மேற்பட்ட விபத்துக்கள் லாரி மோதலால்தான் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு விரைவுப் பேருந்துகளிலே டிரைவர்களுக்கு மாற்று டிரைவர்கள் போடப்பட்ட காரணத்தினால் ஓரளவுக்கு விபத்துக்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் லாரிகளிலே ஓட்டுகின்ற டிரைவர்கள் இரவு முழுவதும் கண்விழித்து ஓட்டுவதால், தூக்கத்தின் காரணமாக விபத்துக்கள் ஏற்பட்டு நேராக வந்துகொண்டிருக்கின்ற வண்டிகளின் மீது மோதி அதன் காரணத்தினால் அந்த லாரி மட்டுமல்ல, எதிரே வருகின்ற வண்டிகளுக்கும் சேதங்கள் ஏற்படுகின்றன, ஆட்களுக்கும் சேதம் ஏற்படுகின்றன. எப்படி பஸ்களிலே மாற்று டிரைவர்கள் போடப்பட்டு விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றதோ அதைப்போலவே லாரிகளிலே மாற்று டிரைவர்கள் போட்டு ஓட்டவேண்டுமென்ற முறையைக் கொண்டுவந்தால் இப்படிப்பட்ட விபத்துக்களை தடுத்து நிறுத்தமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த குறிப்பிட்ட விபத்திலே லாரி டிரைவரும் கிளீனரும் இறந்திருக்கிறார்கள். டி. டி. சி. விரைவுப் பேருந்திலே இருந்த டிரைவருக்கும் கண்டக்டருக்கும் படு சேதம் ஏற்பட்டிருக்கிறது. இருபதிலே ஒருவர் இறந்திருக்கிறார். பல பிரயாணிகளுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது. பலர் அபாயகரமான நிலையிலே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விபத்துக்களைத் தடுத்து நிறுத்த லாரிகள் இரவிலே ஓடக்கூடிய நிலையிலே விபத்துக்களைத் தடுப்பதுபற்றி விவாதிக்கவும் அதை ஒழுங்குபடுத்துவதைப்பற்றி விவாதிக்கவும் விபத்துக்களிலே இறந்துவிட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் உடனடியாகக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்கவும் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3–3–1984 இரவு அல்லது 4–3–1984 அதிகாலை நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டு இருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்தும்

அதேசமயத்தில் சென்னையிலிருந்து பாரம் ஏற்றிக்கொண்டு தூத்துக்குடிக்கு சென்று கொண்டிருந்த லாரியும் தொழுதூர் அருகில் இரண்டும் ஒன்றோடு ஒன்று மோதி பஸ்ஸில் வந்து கொண்டு இருந்த கண்டக்டர் வீரபாகு என்பவர் வயது 32 அந்த இடத்திலேயும் லாரியில் வந்த தியாதின் டிரைவர், முருகையன் கிளீனர் இவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்கின்ற வழியில் இறந்து இருக்கிறார்கள். ஆக மொத்தம் இந்த விபத்தில் 3 பேர் இறந்து இருக்கிறார்கள். விபத்துக்களை பொறுத்தவரைக்கும் பெரும்பாலும இன்றையதினம் அரசு பேருந்துகளானாலும் சரி அல்லது லாரிகள் ஆனாலும் சரி முன்னால் போடக்கூடிய டயர்கள் எப்போதும் புதிதாக போடவேண்டும். ஆனால் சில சமயங்களில் அதை ரீபட்டன் டையர்களை போடுவதினால் ஆபத்து ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதேபோல் லாரிகளில் எப். சி. செய்கின்றபோது லாரிகளை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு கொண்டு செல்லாமல் வேறு ஒரு இடத்தில் இருந்துகொண்டு கூட எப். சி. செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணமாக விபத்துக்கள் ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இவைகளை முறையாக பரிசீலிப்பதற்கு அதாவது லாரிகளில் செல்லக்கூடிய டிரைவர்களுக்கும், கிளீனர்களுக்கும் சரி அல்லது பேருந்துகளில் செல்லக்கூடிய நடத்துனர்களுக்கும் டிரைவர்களுக்கும் சரி முறையாக விபத்தில் இறந்த அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கும் அதேசமயத்தில் லாரிகளை பொறுத்தவரையில் பல்வேறு லாரிகளில் Full Insurance இல்லாமல் third Party இன்சூரன்ஸ் என்ற நிலையில் third Party இன்சூரன்ஸ் என்று சொல்கிறபோது அது பாதையில் நடக்கக்கூடிய விபத்திற்கு மட்டும் நஷ்ட ஈடு தருகிறார்கள்; ஆகவே கிளீனர், டிரைவர்களுக்கும் அந்த மாதிரியான இன்சூரன்சில் நஷ்ட ஈடு கிடைக்கிற வகையில் இதை முழுமையாக இன்சூரன்ஸ் செய்து விபத்து நடைபெறுகிறபோது அந்த நடத்துநருக்கும் லாரி டிரைவருக்கும், கிளீனருக்கும் முழுமையாக நஷ்டஈடு கிடைக்கின்ற வகையில் மேலும் இம்மாதிரியான விபத்துக்கள் நடைபெறாமல் இருப்பதற்கு இன்றைய மற்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 3-3-1984 அன்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக தடம் எண். 572 நாமக்கல்லிருந்து சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த துரிதப் பேருந்துமீது காலை 9 30 மணி அளவில், தொழுதூரிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள ராமநாதம் என்னுமிடத்தில் எதிரே வெகு வேகமாக வந்த லாரி (யவ

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 8

எண். எம். டி. ஜி. 3607) மோதி பெருத்த சேதத்தை உண்டாக்கியது. இவ்விபத்தில் போக்குவரத்துக் கழக நடத்துனர் திரு. வீரபாகு விபத்து நடந்த இடத்திலேயே இறந்து விட்டார்; பேருந்து ஓட்டுநர் திரு. ராகவன் நாயர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்.

நடத்துநர் வீரபாகுவின் குடும்பத்தினருக்கு விபத்து நடந்த இடத்திலேயே ரூபாய் 250 நிதியுதவி வழங்கப்பட்டது. இவரது பணிப்பதிவேட்டில் இவரது வாரிசுதாரர் யார் எனக் குறிப்பிடப்படவில்லையாதலால் ரூ. 1,000 மட்டும் குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. தகுந்த வாரிசு சான்றிதழ் கிடைத்த பின்பு இந்த நிதியிலுள்ள மீதத் தொகையான 9,500 ரூபாயையும் கழகம் வழங்கும். இவரது குடும்பத்தாரில் ஒருவருக்கு கழத்தில் வேலை கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பேருந்தின் ஓட்டுநரான திரு. ராகவன் நாயர் திருச்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். பேருந்தில் பயணம் செய்த திருவாளர்கள் அப்துல்லா, ரங்காராவ் மற்றும் சுவாமி நாடார் ஆகிய மூன்று பயணிகள் இந்த விபத்தில் காயமுற்றனர். இவர்களும் திருச்சியில் உள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு தகுந்த மருத்துவ சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பினர்.

லாரியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் இறந்துவிட்டார்கள். விபத்து நடந்த இடத்தில் செய்யப்பட்ட ஆய்விலிருந்து லாரி ஓட்டுநரின் தவறே விபத்திற்கு காரணம் என்று தெரிகிறது. தகுந்த விசாரணைக்குப் பின் காவல் துறையினர் லாரி உரிமையாளர்கள் மீது தொழுதூர் காவல் நிலையத்தில் 84|84 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டுநர் பொறுப்பல்ல எனத் தெரிகிறது. எனவே, இது குறித்து சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது